**உலக எய்ட்ஸ் தினம்**, 1988 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. எச்.ஐ.வி தொற்று பரவுவதால் ஏற்படும் எய்ட்ஸ் தொற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நோயால் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கவும் இந்நாள்அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள அரசு மற்றும் சுகாதார அதிகாரிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த கல்வியுடன் இந்த நாளைக் கடைப்பிடிக்கின்றனர்.

அதன்படி நமது அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை மற்றும் அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி , அரும்பாக்கம் இணைந்து எய்ட்ஸ் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் , எய்ட்ஸ் விழிப்புணர்வு உறுதிமொழி மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு மனித சங்கிலி  ஆகிய நிகழ்ச்சிகள் 10/12/2024 அன்று அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மருத்துவர் க.கனகவல்லி மற்றும் பொது மருத்துவ துறை துறைத்தலைவர் பேராசிரியர் மருத்துவர் உஜ்ஜிவனம் அவர்கள் தலைமையில் கடைபிடிக்கப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கு பெற்று பயனடைந்தனர். அவர்களுக்கு விழிப்புணர்வு பிரச்சார துண்டு சீட்டு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள்,பட்டமேற்படிப்பு மாணவர்கள் , பயிற்சி மருத்துவர்கள் , மற்றும் மாணவர்கள் பங்கு பெற்றனர்.

